**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.211** **நாள் : 11.08.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நாளை (12.08.2025) 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நாளை (12.08.2025) தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-47ல் கொருக்குப்பேட்டை, ஏ.இ.எம். பள்ளி மைதானம், இராயபுரம் மண்டலம், வார்டு-56ல் பிரகாசம் சாலையில் உள்ள ஹையாத் மஹால், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-67ல் திரு.வி.க. நகர் காமராஜர் திருமண மண்டபம், அண்ணாநகர் மண்டலம், வார்டு-100ல் டி.பி. சத்திரம் பிரதான சாலையில் அண்ணா சமுதாயக் கூடம், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-136ல் சாலிகிராமம், 80 அடி சாலையில் உள்ள சமுதாயக் கூடம், பெருங்குடி மண்டலம், வார்டு-186ல் புழுதிவாக்கம் பிரதான சாலை, சுமங்கலி திருமண மண்டபம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**